# தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பாடசாலை

செந்தூல், கோலாலம்பூர்.

(ஸ்தாபனம் 1906)

# 75-ம் ஆண்டு நிறைவு ஆண்டு மலர்

விவேகம் ஆனந்தம்

S.R.J.K.(T) THAMBOOSAMY PILLAI
SENTUL. K.L.

கற்க கசடறக் கற்பவை

# Buku Cenderamata Sempena Perayaan Ulang Tahun Yang Ke-75

OLEH

LEMBAGA PENGURUS SRJK. (T) THAMBUSAMY PILLAI

SENTUL, KUALA LUMPUR.



அமரர் உயர்திரு தம்புசாமிப்பிள்ளை அவர்கள்

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் இன்றைய தோற்றம்





தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் அன்றைய தோற்றம்



MENTERI KERJARAYA DAN KEMUDAHAN AWAM MALAYSIA
MINISTER FOR WORKS AND UTILITIES MALAYSIA

JALAN SWETTENHAM, KUALA LUMPUR 10-02 MALAYSIA • TEL: 03-984354 • TELEX: MA30415

Perutusan YB Dato' S. Samy Vellu, Menteri Kerjaraya dan Kemudahan Awam sempena Perayaan Ulang Tahun Yang Ke 75, Sekolah Rendah Jenis Kebangsaan (Tamil), Thamboosamy Pillai, Sentul, Kuala Lumpur

Sukacita saya menyampaikan perutusan saya sempena Perayaan Ulang Tahun Yang Ke 75, Sekolah Rendah Jenis Kebangsaan (Tamil) Thamboosamy Pillai, Sentul.

Saya diberitahu bahawa sekolah ini yang kini berusia kira-kira 77 tahun serta mempunyai latarbelakang kemajuan yang menarik hati terus memainkan peranan dengan memberikan khidmat kepada kaum India khasnya dan masyarakat amnya.

Saya tertarik hati bahawa masih ramai kalangan ibubapa yang menghantarkan anak-anak mereka ke sekolah ini dengan hasrat mendidik anak-anak mereka dalam bahasa perantaran Tamil.

Ini adalah satu perkara yang sungguh membanggakan saya kerana dengan sikap dan semangat demikianlah maka dapat kita mempastikan kewujudan sekolah-sekolah Tamil dalam negara kita. Ini juga secara tidak langsung menunjukkan betapa besar minat dan kecenderongan kita untuk terus belajar dan bertutur dalam Bahasa Tamil.

Perkembangan sekolah ini menunjukkan bahawa ianya akan terus wujud selagi terdapat sokongan kuat dari kalangan ibubapa anak-anak kita.

Saya sedar bahawa sekolah ini memang menghadapi banyak masalah dari segi bangunan sekolah dan sebagainya. Saya akan memberikan kerjasama saya dalam apa bentuk juapun bagi mengatasi problem-problem ini.

Akhirnya saya mengucapkan selamat menyambut Ulang Tahun Yang Ke 75 dan berharap mudah-mudahan sekolah ini akan maju jaya dalam masa-masa akan datang.

Sekian, terima kasih.

(DATO' S. SAMY VELLU)

**MENTERI**
**Kerja Raya dan**
**Kemudahan-Kemudahan Awam**
**Malaysia**

Kuala Lumpur
26 Mei 1983

GSS/msa



Ruj. Tuan:

Ruj. Kita:

Tarikh: 24hb. Mei, 1983.

## PERUTUSAN DARIPADA PENGARAH PELAJARAN WILAYAH PERSEKUTUAN

Saya berasa sangat-sangat bergembira menyampaikan perutusan di dalam Majallah yang istimewa ini bersempena menyambut Ulangtahun Ke 75 sekolah ini.

Menyambut perayaan Jubli Intan ini dapat mengingati kembali sejarah silam yang mana bermulanya dengan keadaan yang mendukacitakan, tetapi sekarang SRJK(Tamil) Thambusamy telah membangun dan berkembang seperti mana yang dapat kita lihat sekarang.

Sekolah ini yang ditubuhkan pada tahun 1906 dan sejak itu sekolah ini telah mencapai kemajuan di dalam bidang akademik dan kegiatan-kegiatan luar, saya dengan tidak teragak-agak lagi mengatakan selama 75 tahun sekolah ini telah menekmati kedudukan yang terbaik di Wilayah Persekutuan dan saya sangat gembira memberitahu banyak di antara murid-murid tua sekolah ini telah mencapai kedudukan yang baik pada masa ini.

Kejayaan murid-murid di dalam berbagai bidang dan taraf yang tinggi yang dikendalikan oleh sekolah-sekolah selama ini adalah disebabkan oleh sikap dedikasi dan rasa tanggungjawab yang diberikan oleh semua Guru Besar dan Guru. Kepada semua mereka yang berkenaan saya mengucapkan tahniah dan terima kasih di atas apa yang mereka telah sumbangkan.

Sekolah ini mempunyai Lembaga Pengurus dan PIBG yang sungguh aktiv. Saya juga tidak lupa menyampaikan tanda penghargaan saya di atas kerjasama, sokongan dan sumbanngan mereka terhadap kejayaan sekolah ini. Sumbangan yang mereka berikan tidak harus kita lupakan seperti rancangan permakanan, peruntukan untuk buku-buku sekolah, unifom sekolah, kasut dan sarong kaki yang diberikan kepada murid-murid yang memerlukan.

Saya berharap guru-guru, murid-murid dan ibubapa yang berada di masa sekarang hendaklah menyambong tugas-tugas yang baik itu demi untuk kejayaan sekolah ini.

Akhir sekali saya mengucapkan tahniah kepada semua sempena sambutan Ulangtahun Ke 75.

( MOHD. KHALID B. ABD. HALIM )
Pengarah Pelajaran
Wilayah Persekutuan.



### பள்ளியின் தலைவர்

## டாக்டர் கந்தையா அம்பிகைபாகன்

### அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி 75-ஆம் ஆண்டு நிறைவு விழா கொண் டாடும் இவ்வேளையில், பள்ளி 1960-ஆம் ஆண்டு மூடப்படாமல் ஒரு புதிய இடம் தேடி, பல இன்னல்களிடையே, இப்பள்ளியை அமைப்பதற்கு மூலகாரணமாக இருந்த காலஞ்சென்ற திரு. பி. சுப்பையா, திரு. சி. கந்தையா, திரு. க. சிவப்பிரகாசம், திரு. வ. செல்வநாயகம், ஏஎம்என். எஸ்எம்எஸ்., திரு. க. சின்னத்துரை, திரு. ஆர். மாசிலாமணி ஆகியோரின் எண்ணம்தான் மனதில் தோன்றுகின்றது. அவர்களின் பெருமுயற்சியினாலும், காலஞ்சென்ற துன் வீ.தி. சம்பந்தன், டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் போன்ற பெரியோர்களின் உதவியினாலும் இப்புதியகட்டடம் உருவாகியது.

வள்ளல் தம்புசாமிப்பிள்ளையின் பெயரில் இப்பள்ளியை உருவாக்கிய அவரின் மகன் கே.டி. பரிமணம் பிள்ளையிடம் பொறுப்பேற்று அரசாங்கத்திடம் எவ்வித உதவியும் இல்லாமல் பள்ளியை 1925-ஆம் ஆண்டு முதல் சிறப்பாக நடத்தி வந்த தமிழ் கல்வி அபிவிருத்திச் சபையில் முக்கியமாக காலஞ்சென்ற திரு. பொ. செல்லத்துரை, திரு. நா. பொன்னம்பலம், திரு. எம். கனகசபை ஆகியோர் ஆற்றிய பெரும் பணி அளவற்றது.

| | | | |
|---|---|---|---|
| இன்ன | றுங்கனிச் | சோலைகள் | செய்தல் |
| இனிய | நீர்த்தண் | சுனைகள் | இயற்றல் |
| அன்ன | சத்திரம் | ஆயிரம் | வைத்தல் |
| ஆல | யம்பதி | னாயிரம் | நாட்டல் |
| பின்ன | ருள்ள | தருமங்கள் | யாவும் |
| பெயர்வி | ளங்கி | யொளிர | நிறுத்தல் |
| அன்ன | யாவினும் | புண்ணியங் | கோடி |
| ஆங்கோர் | ஏழைக் | கெழுத்தறி | வித்தல் |

(பாரதியார்)

எனும் மகாகவி பாரதியார் வாய்மொழி கேற்ற இந்நாட்டில் சுமார் 70 ஆண்டுகளுக்கு மேல் கல்விக்கு முக்கியமாக தமிழ் கல்விக்கும் ஏழை மாணவர்களுக்கும் அளவில்லா தொண்டு செய்துவரும் விவேகாநந்தா ஆசிரமத்தார் 1960-ம் ஆண்டு இப்பள்ளியை நடத்தும் பொறுப்பேற்று அரசாங்கத்தின் உதவியுடன் சிறந்த தேசியமாதிரி தமிழ்ப்பள்ளியாக பெருமுயற்சியுடன் பராமரித்து வருகின்றனர்.

மாணவர்களுக்கு மதிய உணவு கடந்த 10 ஆண்டுகளுக்குமேல் விவேகாநந்தா ஆசிரம நிர்வாகத்தினரும், மற்றும் நல்லுள்ளம் படைத்த பெரியோர்களது உதவியாலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளாக அரசாங்கமும் இலவச மதிய உணவு வழங்கி சிறப்பித்தார்கள். அரசாங்கம் அரசாங்கமும் இலவச மதிய உணவு வழங்கி சிறப்பித்தார்கள். அரசாங்கம் நடத்தி வந்த மதிய உணவு நிறுத்தப்பட்டு விட்டதால் தொடர்ந்து நிர்வாகம் இதை அமுல்படுத்தி வருகின்றது. இந்த இலவச மதிய உணவிற்கு தயாள உள்ளம் படைத்தவர்களின் உதவியைப் பெற பெரிதும் விரும்புகிறோம்.

இதைத்தவிர நிர்வாகத்தினர் பள்ளிப்பிள்ளைகளின் போக்குவரத்து வசதியும், ஏழை மாணவ மாணவியருக்கு சீர் உடையையும் வழங்கி பெரிதும் உதவி வருகின்றது.

வரலாறு படைத்த இத்தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி மென்மேலும் ஓங்கி வளர்ந்து, இப்பள்ளியை நிறுவ அயராது உழைத்த பெரியோர்களின் கனவு நினைவாக, செந்தூல் வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் அரிய கலைக்கூடமாக விளங்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன். நன்றி.

அன்புடன்,
டாக்டர் கந்தையா அம்பிகைபாகன்,
தலைவர் — நிர்வாகக்குழு,
தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப்பள்ளி,
செந்தூல், கோலாலம்பூர்.



**விவேகாநந்த ஆசிரம கௌ. காரியதரிசி**

## உயர்திரு க. சிவசம்பு அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தம்புசாமிப்பிள்ளைத் தமிழ்ப்பள்ளியின் 75-ம் ஆண்டு நிறைவு விழா இன்று 25.6.1983-ம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவதைக் காணும் வாய்ப்பை பெற்றமைக்கு நான் எல்லேயில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பள்ளியானது பல இன்னல்களுக்கிடையில் வளர்ச்சிப்பெற்று இன்று தலே நகரில் தமிழையும் நமது பண்பாட்டினையும் வளர்க்கும் கலேக்கூடமாக விளங்குகிறதென்ருல், இப்பள்ளியின் முன்னேற்றத்திற்கு உழைத்த பெரியார்களின் அயரா உழைப்பேயாகும் எனவே அவர்களது புகைப்படங்களே இப்பள்ளியில் வைத்து, அவர்களே நினைவு கூர்வதின் வழி, எதிர்கால சந்ததியினருக்கு ஆர்வமும் ஊக்கமும் எழுச்சியும் பெற வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லே.

இப்பள்ளியைப்பற்றி ஓரளவு நாம் இத்தருணத்தில் அறிந்து கொள்வது நலமாகும். இப்பள்ளிக்கூட பழைய கட்டிடம் 1938-ம் ஆண்டு திரு. லால் என்பவருக்கு விற்கப்பட்டது. அவர் நிலத்தைப்பெற ஆவன செய்துக் கொண்டிருந்த சமயம் அப்போதைய நிர்வாகம் விவேகாநந்தா ஆசிரமத்துடன் தொடர்பு கொண்டு தாங்கள் சேர்த்து வைத்திருந்த வெள்ளி $10.000/–யும் ஆசிரமத்தாரிடம் கொடுத்து, பள்ளியை தொடர்ந்து நடத்த ஆவன செய்யுமாறு வேண்டினர். அதன் நிமித்தம் விவேகாநந்தா ஆசிரமநிர்வாகம் புகையிரதப் பகுதியினரை அணுகி 2¼ ஏக்கர் நிலத்தைப்பெற்று பல பெரியோர்களின் நல்உள்ளங்களால் ஆன இக்கட்டிடம் கடந்த 15.5.1965-ம் ஆண்டு தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் உவகைப்பெருமளவில் திறப்புவிழா கண்டு பீடுநடைப் போடுவதை நாம், இன்று 75-ம் ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடி அகமகிழ்வதிலிருந்து பெருமிதம் அடைகிருேம்.

இக்கட்டிடத்தைக்கட்டி முடிக்க அரும்பாடு பட்ட விவேகாநந்த நிர்வாகச் சபை குழுவினருக்கும், இப்பள்ளியின் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், லாட்டரி போர்டினருக்கும் மனமுவந்த நன்றியறிதலே தெரிவித்துக்கொள்வதில் எல்லேயில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலே மேலும் வளர நாம் எல்லாம் வல்ல இறைவனே வணங்குவோமாக.

நன்றி

க. சிவசம்பு,
கௌ. காரியதரிசி,
விவேகாநந்த ஆசிரமம்.



**சென்ற நாற்பத்தைந்து வருடங்களாகச் சமீபத்தில் குடி இருந்தவரும், பள்ளிக்கூடத்துடன் அனுக்கமாக உறவு கொண்டவரும்; நிர்வாக அங்கத்தினரும்; பின் தலைவருமாக இருந்த திருவாளர் M. A. நகாலிங்கம அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

செந்தூல் தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப் பள்ளிக் கூடத்திற்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே அவர்களது 75ம் ஆண்டு நிறைவு விழாவின்போது கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு செய்தி எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.


பள்ளிக் கூடம் முன்பு இருந்ததை விட இப்போது விவேகாநந்த சபையின் கீழ் மிகவும் மகிழ்ச்சிகரமாக அமைந்திருக்கிறது. தனக்கென ஒரு நல்ல கட்டடமும், விளையாட்டுத் திடலும் சேர்ந்து அமைந்துள்ளது. இதனை நாம் நன்கு பயன்படுத்த வேண்டுமென்பதே எனது அவாவாகும்.

தமிழராகிய நமக்குத் தமிழுக்குச் செய்ய வேண்டிய கடமையொன்றுண்டு. அது தாய்க்கும் பிள்ளைக்கும் அமைந்த உறவு போன்றது. எனவே தமிழாகிய தாய் வருந்தாதபடி பிள்ளைகளாகிய நாம் நம் கடமையைக் கட்டாயம் செய்ய வேண்டும், என்பது எனது நோக்கமாகும். இதை எப்படிச் செயலில் கொண்டுவருவது?

தமிழன், எம்மொழியைப் பேசினாலும், என்ன பழக்க வழக்கங்களை மாற்றி அனுசரித்தாலும் தன் தோலின் நிறத்தை மாற்ற முடியாது. தமிழன் தமிழனே எனவே. தமிழ்ப் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு இதர மொழிகளைப் படிப்பிக்குமுன் இனிமையும், பழமையும் அறிவும் நிறைந்த வள்ளுவர் மொழியாகிய தமிழ்மொழியையே படிப்பிக்க வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்களே உங்களுக்கு ஒரு செய்தி. நீங்கள் மனம்வைத்தால் தான் இது ஆகும். இந்தக் கௌரவமான உத்தியோகத்தை உழைப்பிற்கு மாத்திரம் வைத்திராதீர்கள். தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்யவும் பாவியுங்கள். பாரதியார் கூறியபடி தெருத் தெருவாய், தோட்டம் தோட்டமாய் முழக்கஞ் செய்யுங்கள். ஓய்வு நாட்களிலும், அன்பின் மிகுதியால், தமிழை விருத்தி செய்யப்பாடுபடுங்கள். தமிழின் பெருமையை நிலை நாட்டுங்கள்!

மேல் குறிப்பிட்ட நான்குமே எனது செய்தியாகும். அத்துடன் தம்புசாமிப் பிள்ளை பாடசாலையின் உயர்வை நாடிப்பாடுபடும், தங்கள் நேரத்தையும், செல்வாக்கையும் கொடுத்த திருவாளர்கள் செல்வத்துரை, தனபாலசிங்கம், சுப்பையா, செல்வநாயகம், கந்தையா, சிவப்பிரகாசம், ஆர். மாசிலாமணி, இன்னும் விடுபட்ட மற்ற பெரியோர்களுக்கு எனது நன்றி.



# உயர்திரு வி.கு. சந்திரசேகரன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

செந்தூல், தம்புசாமிப்பிள்ளைத் தமிழ்ப் பள்ளியின் தோற்றம் இப்போது 75 ஆண்டுகளைக் கடந்துவிட்டிருக்கிறது என்று அறியும்போது இப்பள்ளியின் தொன்மைமிக்க கடந்தகாலம் முக்கால் நூற்றாண்டை எட்டிவிட்டதை உணர் கின்றோம்.

இந்த 75 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இப்பள்ளி எந்த அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கவேண்டும் என்பதையும் இந்த வேளையில் சிந்திப்பது அவசியம் என்று கருதுகிறேன்.

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் நிர்வாகம் பல துறைகளில் நம்முடைய மாணவர்களின் சிறப்பான எதிர்காலத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து வந்துள்ளதை, இப்பள்ளியோடு தொடர்புடையவர்கள் நன்கு உணர்வார்கள்!

ஆனால், இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள எத்தனைத் தமிழ்ப் பெற்றோர் கள் இவ்வட்டாரத்தில் முன்வந்திருக்கிறார்கள் என்று சிந்தித்தால், மனதுக்கு வேதனைத் தரக்கூடிய பதிலையே காண முடிகிறது.

தமிழ்ப்பள்ளிக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பவேண்டும் என்று நம்முடைய ம.இ.கா. தேசியத் தலைவரும், பொதுப்பணி பயனீட்டுத் துறை அமைச்சருமான மாண்புமிகு டத்தோ ச. சாமிவேலு அவர்கள் பல் ஆண்டுகளாக தமிழ்ப் பெற்றோர்களை வற்புறுத்தி, இன்று "வீட்டில் தமிழில் பேசுங்கள்" என்னும் பிரச்சார சுலோகத்தையும் முழுங்கியிருக்கும் இவ்வேளையில், நம் சமுதாயம் தமிழ்ப் பள்ளியின் எதிர்காலத்தையும், தமிழின் எதிர்காலத்தையும் மனத்திற் கொண்டு, நம் முடைய சிந்தனையை மாற்ற வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி இன்று 75-ம் ஆண்டு நிறைவை கோலா கலமாகக் கொண்டாடும் வேளையில், எதிர்வரும் ஆண்டிலாவது நம் வீட்டுப் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு குறிப்பாக இவ்வட்டாரத்தில் வதியும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தம்புசாமி தமிழ்ப்பள்ளிக்குத் தங்கள் பிள்ளை களை அனுப்பிவைத்து, தமிழ்மொழி மலேசியத் திருநாட்டில் தழைத்து வாழ ஆதரவு தருமாறு, இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

75 ஆண்டுகாலத்தில், தம்புசாமிப்பிள்ளைத் தமிழ் பள்ளி, பல சமுதாயச் சிற்பிகளை உருவாக்கியிருக்கிறது. அதுமேலும், தனது தமிழ்ப்பள்ளியைத் தொடர்ந்து ஆற்றப் பாடுபடுவோம்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில், இப்பள்ளியின் வளர்ச்சிக்குப் பாடு வோரை வாழ்த்தி வணங்குகிறோம்.

அன்புடன்,

வீ. கு. சந்திரசேகரன்.



## பள்ளியின் பழைய மாணவர் சங்கம்
## தலைவர்
## உயர்திரு R.S. மணியம் AMN, PJK.
## அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

செந்தூல் தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் 75-வது ஆண்டு நிறைவு விழாவினை யொட்டி என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய நிலையில் நமது இந்திய சமுதாயத்தின் கல்விப்பிரச்சனை, குறிப்பாக தமிழ்ப் பள்ளிகளின் நிலை, தரம், முன்னேற்றம், இவை குறித்தேப்பரவலாகப் பேசப்பட்டு வருவதையும் கேள்வியுறுகிறோம்.

தலைநகரில் செந்தூலில் கம்பிரமான தோற்றத்துடன் விளங்கும் கல்விக் கூடமானது எந்தப்பிரச்சனைக்கும் ஆளாகாமல் பீடுநடைப்போட்டு, பல இந்திய இளைஞர்களின் கல்வி கண்ணைத்திறந்து இன்று 75-ம் ஆண்டு நிறைவினையும் பெற்று, இந்திய சமூகத்தின் பெருமையையும் நிலைநாட்டி ஓர் உயர்ந்த கலைக்கூடமாக விளங்குகிறது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பள்ளியில் கல்விபயின்ற எத்தனையோ மாணவ மாணவிகள் டாக்டர்களாகவும், வக்கில்களாகவும், பொறியியலாளராகவும் இன்னும் பலர் அரசியல் துறையிலும் மேன்மையான நிலையில் இருப்பதைக் காண்கிறோம். இத்தகைய முன்னாள் மாணவர்கள் தங்களின் உயர்வுக்கு முதல் அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்த பள்ளிக்கூடம் என்பதை என்றும் மறவாமல் ஒருசில சமயங்களிலாவது தங்களது ஆலோசனையையும், சேவையையும் இப்பள்ளியின் நன்மைக்காக வழங்க முன்வர வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பள்ளியின் பழைய மாணவர் சங்கத்தைப் பொறுத்தவரை தன் சக்திக்குட்பட்ட பல காரியங்களை பள்ளியின் முன்னேற்றத்திற்காக எல்லாக் காலக் கட்டங்களிலும் ஆற்றிவந்துள்ளது என்பதைக் கூற கடமைப்பட்டுள்ளேன். இப்பள்ளிக்கென சொந்தக் காண்டீன் ஒன்றை செந்தூல் இந்திய வாலிபர் சங்கத்தின் முழு ஆதரவோடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்தது. இப்பள்ளியில் தேவார வகுப்பையும் ஏற்படுத்தி சமய அறிவை ஊட்டிடும் நோக்கத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளது.

75-வது ஆண்டு நிறைவை எய்தும் இவ்வேளையில், இப்பள்ளி நம் சமூகத்தின் மத்தியில் பல அறிஞர்களையும் நற்குடி மக்களையும் தொடர்ந்து உருவாக்கக்கூடிய கல்விக்கூடமாக விளங்க வேண்டுமாய் வாழ்த்துக்கள் கூறி விடை பெற்றுக்கொள்கிறேன்.

நன்றி

அன்புடன்,
R.S. மணியம் AMN. PJK.,
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி,
செந்தூல்,
கோலாலம்பூர்.



### தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் தலைமையாசிரியர்

## உயர்திரு இராம முத்துக்கருப்பன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் 75-ம் ஆண்டு நிறைவு விழா எல்லா வழிகளிலும் சிறப்புற்று விளங்க எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

75-ம் ஆண்டை கடந்து உறுதியான ஓர் ஆலமரமாகக் காட்சி அளிக்கும் இப்பள்ளியில் நான் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தலைமையாசிரியர் பொறுப்பேற்று, தொடர்ந்து சேவையாற்றி வருவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

இப்பள்ளி கடந்த 75 ஆண்டுகளில் பல சோதனைகளை கடந்து இன்று ஒரு கலைக்கூடமாக, தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்பதைக் காணும்போது, தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் எல்லையில்லா மகிழ்ச்சியடைவதில் வியப்பில்லை.

1960-ம் ஆண்டு இப்பள்ளியின் வரலாற்றில் ஒரு விடிவெள்ளியாக மலர்ந்தது தான், தமிழ் கல்வி அபிவிருத்தி சபையினர் முழு நிர்வாகப் பொறுப்பை கோலா லம்பூர் விவேகாநந்த ஆச்சிரம நிர்வாகத்திடம் ஒப்படைத்தது. பின்னர் இரண்டு ஆண்டுகளாக இன்னல்கள் பல இடையிடையே தோன்றினுலும்கூட பல சிரமத் திற்கிடையில், இக்கலைக்கூடத்தை பட்டொழிந்து போகாது நிலைநாட்டிய பெருமை விவேகாநந்த ஆச்சிரம நிர்வாகச் சபையினரையே சாரும்.

1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ந் தேதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மறைந்த அமைச்சர் துன் சம்பந்தன் அவர்களால் பள்ளியின் கால்கோள் விழா இனிது பூர்த்தியாகி, மறைந்த அமைச்சர் டான் ஸ்ரீ வே. மாணிக்கவாசகத் தால் கட்டிடத்திறப்பு விழா 15.5.1965-ம் ஆண்டு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று, இன்று கம்பீரமான தோற்றத்துடன், நமது மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இயங்கிவரும் இப்பள்ளியின் 75-ம் ஆண்டு நிறைவு விழாவினை காணும் நாள் எல்லாவகையிலுமே மிகப்பொருத் தமானதே என்றால் மிகையாகாது.

இறுதியாக இப்பள்ளியின் நிர்வாகச் சபையினரின் சேவையை இத்தருணத்தில் பாராட்டுவதோடு, எனது இனிய வாழ்த்தினையும் தெரிவித்து, இவர்களது பணி தொடர்ந்து சிறப்படைய இறைவனை இறைஞ்சுவதோடு ஒற்றுமையே உயிர்நாடி என்பதற்கொப்ப ஒன்றித்து இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்து தமிழ்ப்பணி சிறக்கவும், தமிழ்ப்பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு வளம்பெற துங்களாலியன்ற அனைத்தும் செய்து உயர்வடைவோமாக!

நன்றி — உயர்வோம்.

இங்ஙனம்,

இராம முத்துக்கருப்பன்.

# பள்ளியின் வரலாறு

1906ஆம் ஆண்டு திரு. இராச சூரியா அவர்கள் தனிமண்டபம் அமைத்துக் கல்விப் போதனையை நடத்துவித்தார்.

அந்நாளில், கோலாலம்பூரில் செந்தூல் வட்டாரத்தில் அரசாங்கம் புகையிரத தொழிற்சாலை ஒன்றினை அமைத்தனர். இத்தொழிற் சாலையில் பணிபுரிய தமிழர்கள் நூற்றுக் கணக்கில், செந்தூல் பகுதியில் குடியேறினர்.

அந்நாளில் இப்பகுதியில் பள்ளிகளே இல்லையென்று கூறலாம். கோலாலம்பூரில் ஓரிரு பள்ளிகளே இருந்திருக்கலாம். மேலும்போக்குவரத்து வசதிகளும் குறைவு. இச் சூழ்நிலையில் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அறிவை யூட்ட பெற்றோர்கள் ஆர்வங்கொண்டனர். திரு.இராச சூரிய அமைத்தக் கட்டிடத்தில் கல்வி போதனை நடைபெற்றது.

திரு. இராச சூரியாவின் கட்டிடங்கள்- பள்ளி மண்டபம் உட்பட, விற்பனைக்கு வந்த பொழுது, அந்நாளில் வாழ்ந்த தமிழ்ப் பெருமகனார். கொடை வள்ளல் கா. தம்புசாமிப் பிள்ளை அவர்களின் திருக்குமாரன் பரிமணம் பிள்ளை பாடசாலைக் கட்டிட்த்தை விலைக்கு வாங்கி, அவர் தந்தை கா. தம்புசாமிப்பிள்ளை அவர்களின் பெயரால் பாடசாலையை நடத்தி வந்தார்.

திரு.கா. த. கணபதிப் பிள்ளை அவர்கள் தர்ம கர்த்தாவாகப்பள்ளியைப் பராமரித்து வந்தார்.

அதே வேளையில் தமிழ்ப் பிரமுகர்கரும், கல்வி அபிமானியுமாகிய திரு.எஸ். செல்லத் தம்பி அவர்களும் ஒரு தமிழ்ப் பள்ளியை நடாத்தி வந்தனர்- ஆண்டுகள் பல கழிந்தன.

தாய் மொழிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த தமிழர்கள் 1925ஆம் ஆண்டில் திரு.ரா.வீ. சுப்பையா பிள்ளை. அவர்களின் தலைமையில், தமிழ்க் கல்வி அபிவிருத்திச் செயற்குழு ஒன்றினைத் தேர்வுசெய்தனர்.

தமிழ்க் கல்வி அபிவிருத்திச்சபை என்ற பெயரால் இக்குழு செயலாற்றி வந்தது.

பொது மக்களின் ஆதரவுக் குறைவினால், இவ்வட்டாரத்தில் அன்று இயங்கிய இரு பள்ளிகளும் திறம்பட நடைபெறவில்லை. ஆகவே தமிழ்க் கல்வி அபிவிருத்திச்சபை, தம்புசாமிப் பிள்ளைத் தமிழ்ப் பள்ளி தர்மகர்த்தா கா. த. கணபதிப் பிள்ளை அவர்களின் அனுமதியைப்பெற்று தம்புசாமிப் பிள்ளைத் தமிழ்ப் பள்ளியை நடத்த இசைந்தனர்.

தமிழ்க் கல்வி வளர்ச்சி சபை ஆரம்பத்தில் 38 மாணவர்களுடனும் இரு ஆசிரியர்களுடனும் பள்ளிக் கூடத்தை நடத்தி வந்தனர்.

பத்து ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கை 204 ஆக அதிகரித்ததுடன், ஆசிரியர்களின் எண்ணிக்கையும் ஏழாக உயர்ந்தது அன்று அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த மானியம் மிகவும் சொற்பமே. ஆகவே மாணவர்களிடம் இருந்து பள்ளிக் கட்டணமும், தமிழபிமானிகளிடம் இருந்து தன் கொடைகளும் பெறப்பட்டன.

கல்வி அபிமானிகளும் -நகரத்தார் உட்பட- பலர் நன் கொடைகளைக் காலத்துக்குக் காலம் மனமுவந்து வழங்கி வந்தனர். சபையாரும் தாம் எடுத்துக்கொண்ட தலையாயத் தொண்டு சிறப்பாகச் செயல் படவும் கவனித்து வந்தனர்.

பெரும்பாலும் ஆசிரியர் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் கடமையில் அமர்த்தப் பட்டிருந்ததால், திருவாளர்கள் இ. தம்பிப் பிள்ளை ஜே.பி எம். ஏ. நாகலிங்கம் போன்ற ஆங்கில மொழியில் ஆசிரியர் பயிற்சி, பெற்ற ஆசிரியர்கள் மேற்பார்வையில், கல்வித் தரம் குறைபடாது கண் காணித்து வந்தனர்.

பெற்றோர் தினம், பரிசளிப்பு நிகழ்வுகள், போட்டி விளையாட் டுக்கள் மூலம் பாடசாலை வளர்ச்சியினை கல்வி அதிகாரிகளுக்கும், பெற் றோர்களுக்கும், தமிழ்ப் பெரு மக்களுக்கும் தெரிவிக்கவும், பள்ளிக் கூடத் தேவைகளையும் நிலைமையையும் எடுத்துரைக்கவும் பயன்படுத்திக் கொண்டனர்.

எடுத்துக் காட்டாக 1935ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாள் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் மாநிலகல்வி அதிகாரி திரு.சொலீஸ் அவர்களை வரவேற்றுப் பள்ளியின் அபிவிருத்தி சம்பந்தமாகவும், குறிப் பாக ஆசிரியர் போதனா முறை வகுப்பின் அவசியத்தையும் எடுத்துக் கூறி, ஆசிரியர் போதனாமுறை வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்யுமாறு வேண்டி டினர்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ்ப் போதனா முறை வகுப்புக் கள் தொடங்கப் பெற்றன என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, இடம் போதாமையால் இன்னுமொரு கட்டிடம் அமைக்கப்பட்டது.

இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் உயர்கல்விக்காக ஆங்கிலப் பள்ளியை நாடினர். அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியாக மூன்றாம் வகுப்பில் இருந்து, ஆங்கிலப் போதனையும் அளிக்கப்பட்டது.

பெண்களுக்கு தையல், சங்கீதம் ஆகியவை முக்கிய இடம்பெற் றிருந்தன.

தேவார வகுப்புக்கள், நவராத்திரி, குரு பூசைகள் ஆகியவை பள்ளியில் இடம் பெற்றிருந்தன.

கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்திசபா அங்கத்தின்னர்கள் சங்கீதம் கற்றுக் கொடுக்கவும் வசதிகளும், ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

மாலாயக் கூட்டரசுக் கல்வித் திட்டம் அமுல் படுத்தப்பட்டதும், பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்க பிள்ளைகளின் பள்ளி நுழைவு உறுதிப் படுத்தப்பட்டது. இக்கல்வித் திட்டத்தால், இப்பள்ளியின் பிள்ளை களின் எண்ணிக்கைக் கணிசமாகக் குறைந்தது.

மேலும் ஜப்பானியர் காலத்தில் பள்ளி இருந்த இடத்தின் உரிமை யும் கைமாறியது. நிலத்தின் உரிமையாளர் தம் நிலத்தை அபி விருத்தித் திட்டங்களுக்காக எடுத்துக்கொண்டார்.

அதனால் 1960ஆம் ஆண்டு பள்ளிக் கூடம் மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பல்லாண்டுகளாகப் பலன் தந்த கல்விக் கூடம் பட்டொழிந்து போவதைத் தமிழபிமானிகள் விரும்பவில்லை. அதனால் பெற்றோரும், மற்றோரும் தங்களின் கடமையை உணர்ந்தனர். பள்ளிக்கு நிலையான ஓர் இடத்தைத் தேட முயன்றனர்.

தமிழ்க் கல்வி அபிவிருத்தி சபை பள்ளிக் கூடம் செழிப்பாகவும், எழிலுடனும் வளம் பெறவும் பல்லாண்டுகாலம் நிலைத் திருக்க வேண்டும் என்ற நன்னோக் கோடு, தம்புசாமிப் பிள்ளைத் தமிழ்ப் பள்ளியின் நிர் வாகப் பொறுப்பைக் கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரம நிர்வாகத்திடம் ஏற்றுக் கொள்ளும் படி வேண்டி, அச்சபையினரிடம் ஒப்படைத்தனர்.

விவேகானந்த ஆச்சிரமத்தின் நிர்வாக சபை முயற்சியாலும் குறிப்பாக அமரர் எஸ். கந்தையா, அமரர் யு. செல்வ நாயகம் ஏ.எம். என். அமரர் கே. சிவப் பிரகாசம், அமரர் பி. சுப்பையா, அமரர் கே.சின்ன துரை, திருவாளர் எம்.ஏ. நாகலிங்கம் திருவாளர் ஆர்.டி. இராஜன் திருவளார் அ. ஆறுமுகம் ஆகியோரின் அயரா உழைப்பினாலும், மலாயன் புகையிரதப் பகுதி ஜெனரல் மாஜோர் டான்ஸ்ரீ அமாட் பிராங் அவர்களிடம் மூன்றரை ஏக்கர் நிலத்தைத் தந்துதவுமாறு வேண்டினர்.

இப்பகுதி மக்களின் வேண்டுகோளுக் கிணங்கவும், சிலாங்கூர் மாநில ஆட்சிக் குழுத்தலைவர் மாண்புமிகு டத்தோ அப்துல்லா யாசின் அவர்களின் பரிந்துரையாலும், மலாயன் புகையிரத நிர்வாகம் நிலத்தை வழங்கினர்.

மலாயன் புகையிரத நிர்வாகம் வழங்கிய நிலத்தைச் செப்பனிட ஏற்பட்ட இடையூறுகள் விவேகானந்த ஆச்சிரமத்தின் வேண்டு கோளுக்கிணங்க அமரர் டத்தோ எஸ். ஆதிநாகப்பன் அவர்களும் திரு. க. பாலசுந்தரம்அவர்களும் பிரச்னைகளைத் தீர்த்து வைத்தனர்.

1963ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ந் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்குப் பொது மரா மத்து தபால் தாந்தித் துறை அமைச்சர் அமரர் மாண்புமிகு துன் வீ.தி. சம்பந்தன் அவர்களால் பாடசாலைக் கால் கோள்விழா நடைபெற்றது.

1965ஆம் ஆண்டு மேத்திங்கள் 15ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு, தொழிலாளர் அமைச்சர் மாண்புமிகு டான்ஸ்ரீ மாணிக்க வாசகம் அவர்கள் புதிய கட்டிடத்திறப்பு விழாவை நடத்திவைத்தனர்.

கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரமத்தின் கண்காணிப்பிலும் அரசாங்கத்தின் ஆதரவுடனும் தம்புசாமிப் பிள்ளைத் தமிழப் பள்ளி சிறப் பாக இயங்கி வருகிறது.

வரலாற்யைத் தொகுத்தவர்கள்,

**திருமதி R. தைலம்மாள் அவர்கள்**

**உயர்திரு. M சுப்ரமணியம் அவர்கள்**

(முன்னால் தலைமையாசிரியர்கள்)

# நிகழ்ச்சி நிரல்

1 இறை வணக்கம்:
2. துதிப்பாடல்கள்: திருமதி யோகேஸ்வரி நாகலிங்கம் குழுவினர்
3. தமிழ் நடனம்: தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி மாணவிகள்
4. ஆங்கில நடனம்: தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி மாணவிகள்
5. தலைவர் உரை: டாக்டர் கந்தையா அம்பிகைபாகன் அவர்கள்
6. சிறப்புரை: உயர்திரு. முகமட் காலிட் கல்வி அதிகாரி கூட்டரசுப் பிரதேசம்
7. சிறப்புரை: மாண்புமிகு அமைச்சர் டத்தோ S. சாமிவேலு அவர்கள்
8. மலாய் நடனம்: தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி மாணவிகள்
9. நடனம்: குமாரி விஜயாகௌரி இராமநாதன்
10. நன்றியுரை: தலைமையாசிரியர்
11. நடனம்: குமாரி விஜயாகௌரி இராமநாதன்
12. தேசிய கீதம்: பள்ளி மாணவ, மாணவிகள்.

1. Doa Selamat
2. Lagu-lagu suci - Puan Yogeswari Nagalingam
3. Tarian India - Murid-murid SRJK(T) Thamboosamy Pillai
4. Tarian Hawaee - Murid-Murid SRJK(T) Thamboosamy Pillai
5. Ucapan Pengerusi - Doktor K. Ambikaibakan
6. Ucapan Khas - Yang Berbahagia Muhamad Khalid
   Pengarah Pelajaran W. Persekutuan
7. Ucapan Khas - Y. B. Dato S. Samyvellu (menteri Kerjaraya)
8. Tarian Melayu - Murid-murid SRJK(T) Thamboosamy Pillai
9. Tarian Tradisi - Cik Vijayagowri Ramanathan
10. Ucapan Terima Kasih - Guru Besar
11. Tarian Tradisi - Cik Vijayagowri Ramanathan
12. Negara Ku - Murid-murid SRJK (T) Thamboosamy Pillai

# பள்ளி நிர்வாகக் குழுவினர்

தலைவர்: 1. டாக்டர் கந்தையா அம்பிகைபாகன்

2. உயர்திரு எம். ஏ நாகலிங்கம்

3. உயர்திரு கே. சிவசம்பு

4. உயர்திரு எஸ். நடராஜா

5. உயர்திரு பி. கோடிவேல்

6. உயர்திரு ஆர். ஆர். இரத்தினம்

7. உயர்திரு எஸ். A சிதம்பரம்

8. உயர்திரு ஆர். எஸ். மணியம் AMN. PJK.

9. உயர்திரு வி. கு. சந்திரசேகரன்

10. உயர்திரு தங்கவேலு


11. உயர்திரு எம். பி. நாதன்

12. உயர்திரு கே. ஓம்காரசிங்கம்

செயலாளர்: திரு. ஆர்எம். முத்துக்கருப்பன் (தலைமை ஆசிரியர்)

13. திருமதி ஆர். தைலம்மாள்

14. உயர்திரு ரெங்கநாதன்.



# 1983ம் ஆண்டு நிர்வாகக்குழு,
# தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி, செந்தூல்

1. இடமிருந்து வலம் முன்வரிசை: திரு. கே. சிவசம்பு அவர்கள்
தலைவர்: டாக்டர் கந்தையா அம்பிகைபாகன் அவர்கள்
திருமதி ஆர். தைலம்மாள் அவர்கள்
திரு. எஸ். நடராஜா அவர்கள்

2. பின்வரிசை இடமிருந்து வலம்: திரு. இ. இ. இரத்தினம் அவர்கள்
திரு. இ. ரெங்கநாதன் அவர்கள்
திரு. க. ஓம்காரசிங்கம் அவர்கள்
திரு. ஆர். எஸ். மணியம் AMN, PJK. அவர்கள்
திரு. மா. அம்பிகாபதி
(இடைக்கால தலைமையாசிரியர்).



# 1983ம், ஆண்டின் பள்ளி

# ஆசிரியர் ஆசிரியைகள்

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்:


திருமதி. ப. வ. இராஜா, திரு. வடிவேலு,
தலைமையாசிரியர் திரு. ஆர்எம். முத்துக்கருப்பன்,
உதவி தலைமையாசிரியர், திரு. மா அம்பிகாபதி,
திருமதி கோ. சீத்தாருக்குமணி.

இடமிருந்து வலம் பின் வரிசையில் நிற்பவர்கள்:

திருமதி க. கோகிலாம்பாள், குமாரி: க. வீரதங்கம்,
திருமதி ப. ருக்குமணி, குமாரி: ரெ. பரமேஸ்வரி,
குமாரி: இராசண்முகவள்ளி. திருமதி இரா. தமிழரசி.
குமாரி: பெ. அங்கம்மா.

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் ஆசிரியர் ஆசிரியைகளுடன

பள்ளி மாணவ - மாணவிகள் 1983





# தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி
# பழைய மாணவ மாணவிகள் சங்கம்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முன்வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம்**


திரு. பொ. தியாகராஜா, துணைச்செயலாளர், திரு. எம். பி. நாதன் கௌ. பொதுச்செயலாளர், திரு. ஆர். எஸ். மணியம், தலைவர், திரு. P. முத்துசாமி துணைத்தலைவர், திரு. E. ரெங்கநாதன் கௌ. பொருளாளர். குமாரி ஆ. செல்வி

**பின் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு. ஆர். ராஜகோபால், திரு. பி. எஸ். தம்பிராஜா, திரு. சந்திரா, திரு. கோ. வேலு, துணைப்பொருளாளர், திரு. எஸ். குணசேகரன்.

**படத்தில் இடம் பெறாதவர்கள்**

குமாரி இமானுவேல் லொரன்ஸ், குமாரி. பரஞ்சோதி, திரு. மருதை, திரு. மூர்த்தி.



**1965**-ம் ஆண்டு புதிய பள்ளியின் திறப்பு விழாவன்று விவேகாநந்த ஆசிரம நிர்வாகக்குழு உறுப்பினர் உயர்திரு பி. ஆறுமுகம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிருர்



அமரர். தவத்திரு சுவாமி பிரனவானந்த சரஸ்வதி அவர்கள்
,, டான்ஸ்ரீ ஆதிநாகப்பன் அவர்கள்
,, பெரியார் இராமனுதன் செட்டியார் **BA,BL** அவர்கள்
அமரர். டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்கள்
திரு. **A**. கந்தையா அவர்கள்
அமரர். திரு. **P**. சுப்பையா அவர்கள்



## PENGHARGAAN

Lembaga Pengurus, Guru Besar, Guru Guru Ahli Ahli PIBG, Murid-murid Tua sekolah ini, mengucapkan ribuan Terima Kasih kepada semua yang berkerjasama dengan kami, memberi derma dan pertolongan perkhidmatan untuk menjayakan perayaan Ulang Tahun Yang Ke 75 sekolah kami ini.

# நன்றி

பள்ளி நிர்வாகக் குழுவினர்களும். தலைமையாசிரியரும், ஆசிரியரும் ஆசிரியைகளும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரும், பழைய மாணவ மாணவியர் சங்கத்தினரும், **இப்பள்ளியின் 75-ம் ஆண்டு நிறைவு விழாவினை** சிறப்பிக்க வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் டத்தோ **S. சாமிவேலு** அவர்களுக்கும், மற்றும் இவ்விழாவினை சிறப்பிக்க எல்லாவகையிலும் உதவிய நிர்வாகக் குழுவினருக்கும், நன்கொடையளித்த நல்லுள்ளங்களுக்கும் பள்ளியின் சார்பில் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின்
இடைக்கால தலைமையாசிரியர்
**மா. அம்பிகாபதி**

# நினைவாஞ்சலி

## தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த நல்லுள்ளங்கள்



அமரர் கே. சிவப்பிரகாசம்
முன்னாள் கௌ. காரியதரிசி.
விவேகாநந்தா ஆசிரமம்.



அமரர் வி. செல்வநாயகம் ஏ.எம்.என்
தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின்
முன்னாள் அதிபர்குழு உறுப்பினரும்,
விவேகாநந்தா ஆசிரம நிர்வாகியும்
ஆவார்.



**ஆர். மாசிலாமணி**

தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியின்
பழைய மாணவர் சங்கத் தலைவர்,
ஆர். மாசிலாமணி,
நிர்வாகக்குழு உறுப்பினரும் ஆவார்.



அமரர் எஸ். கந்தையா,
மூன்னாள் கௌ. காரியதரிசி,
விவேகாநந்தா தமிழ்ப்பள்ளி,
தம்புசாமிப்பிள்ளை நிர்வாகக்குழு
உறுப்பினர்.

அமரர் கே. சின்னத்துரை,
விவேகாநந்தா ஆசிரமம் பொருளாளர்,
தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி
நிர்வாகக்குழு உறுப்பினர்

அமரர் பி. சுப்பையா,
முன்னாள் தலைவர்,
தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளி,
விவேகாநந்தா ஆசிரம நிர்வாகக்குழு
உறுப்பினர்.

# தமிழ்க்கல்வி அபிவிருத்திச் சபை
## தம்புசாமி தமிழ்ப் பாடசாலை செந்நூல்

### சபை அங்கத்தவர்கள்

பொ. செல்வத்துரை (1925 - 1952; கௌரவ பொருளாளர் 1934 - 1952; கௌரவ மனேஜர் 1949 - 1952)
M. K. இராமச்சந்திரம் (1925 - 1951)
ரா. வீ. சுப்பையா பிள்ளை (1925 - 1938)
S. நாகலிங்கம்
P. இளையதம்பி } (கௌரவ செயலாளர்கள் 1925 - 1932)
நா. பொன்னம்பலம் (1925 - 1952; கௌரவ செயலாளர் 14-3-34 - 17-4-39)
த. ரு. ரெகுபதி ராவ் - 1932)
M. S. கோவிந்தசாமி (1925 - 1932)
அ. தனபாலசிங்கம் (1925 - 1935; கௌரவ செயலாளர் 1-1-32 - 13-3-34)
சி. முத்துத்தம்பி (1925 - 1933; கௌரவ பொருளாளர் 1-1-32 - 31-12-33)
ரு. கோ. வீரையா (1933 - 1949)
சி. வி. இரத்தினம் முதலியார் (1925 - 1946)
இ. ச. அருணசலம் (1932 - 1934)
சி. அப்பா பிள்ளை (18-4-1939 - 3-9-52; கௌரவ செயலாளர் 1939 - 1948)
நா. ஆறுமுகம் (1932 - 1945)
வ. இராஜா (1932 - 1946)
த. சின்னப்பூ 1932 - 17-6-34)
வ. பொன்னுத்துரை (1932 - 1936)
எ. அரியகுட்டி (17-6-34 - 28-2-49)
ச. மு. மாணிக்கம் (1934)
அ. வேலாயுதம் பிள்ளை (17-6-34 - 1941)
க. கதிரிப்பிள்ளை (1936 - 1946)
Dr. K. தில்லையம்பலம் 1937 - 1938)
சி. கந்தையா (1938 - 1941)
இ. வ. காளகண்டன் (1945 - 1949)
W. M. டட்லி (1946 - 1947)
J. F. இராஜன் (1946)
சு. கந்தையா (1947)
V. காசிநாதன் (1947 - 1951)
மு. கனகசபை (1949 - 1961; கௌரவ செயலாளர் 23-3-1949 - 19-9-51; கௌரவ மனேஜர் 1953 - 1958)
G. முனுசாமி (1949 - 1960)
த. பொன்னையா (1949 - 1955: கௌரவ செயலாளர் 18-7-51 - 24-6-55)
அ. மகாலிங்கம் (1949 - 1955)
S. வைரமுத்து (கௌரவ செயலாளர் 25-6-55 - 30-11-60)
பொ. சுப்பையா (1950 - 1961; கௌரவ செயலாளர் 5-12-60 - 24-6-61)
S. முருகேசு (1952 - 1960)
செ. இரத்தினசிங்கம் (1952 - 1961 கௌரவ பொருளாளர்)
E. கந்தசாமி 1958 - 1961)
P. நவரத்தினம் M.sc. (1957 - 1961)
அ. ஆறுமுகம் (1960 - 1961)
க. சிவப்பிரகாசம் (1960 - 1961)
க. பாலசிங்கம் (1960 - 1961)
M. K. P. R. பழனியப்பன் (1960 - 1961)

திருவாளர்கள்: P. தாமோதரம் பிள்ளை, S. செல்லையா, S. தம்பிஐயா, V. முருகேசு, S. சரவணமுத்து, A. வேலுப்பிள்ளை ஆகியோர் கணக்குப் பரிசோதகர்களாக கடமையாற்றினர்.

சங்க அங்கத்தவர்களாகவோ உத்தியோகத்தர்களாகவோ கணக்குப் பரிசோதகர்களாகவோ கடமையாற்றிய அன்பர்கள் பெயர்கள் விடப்பட்டிருப்பின் அவர்கள் யாவர்களது சீரிய பணியும் போற்றற்பாலதே.

# அழகிய அச்சு வேலைகளுக்கு
# சிறந்த இடம்

# தமிழ்மலர் அச்சகம்

எண் 11, ஜாலான் முராய் டுவா பத்து காம்பளக்ஸ்
மூன்றே கால் மைல், ஜாலான் ஈப்போ,
கோலாலம்பூர். போன்: 667209 -Ext-16

**எல்லாவித அச்சு வேலைகளும் தரமான முறையில் குறித்த நேரத்தில்
நியாயமான ,விலையில் அச்சிட்டு தரப்படும்.**

Any time of the year you have a Date with

# TAMIL MALAR SDN. BHD.

## JOB SECTION

Offset and Letter Press Printing for Export and local market

Books, School Magazines and Catlogues, Brochures invoices
Letterheads Envelopes, Calling Card Self Adhesive Lables,
Wedding Card in English, Malay, Tamil,
Greeting. Calenders. Etc.
For all your Printing needs we provide Prompt and Efficient
Service at Competitive rate for Small or big
orders Contact us for quotations.

No. 11, **JALAN MURAI DUA, BATU COMPLEX, 3¼ MILE, JALAN IPOH,
KUALA LUMPUR.** Tel: 667209 -Ext-16

Printed by TAMIL MALAR SDN BHD (Job Section)
No. 11, Jalan Murai Dua, Batu Complex, 3rd Mile, Jalan Ipoh, Kuala Lumpur. Tel: 667209 Ext 16.